**ஐக்கிய தேசியக் கட்சி அரசியலமைப்பு ரீதியாக உத்தேசித்துள்ள தேசியப் பட்டியல் பாராளுமன்ற நியமனம் தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் அறிக்கை**

**24 ஜனவரி 2020, கொழும்பு, இலங்கை:**

கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்னவின் பதவி விலகலினால் வெற்றிடமாகியுள்ள அதன் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை நிரப்புவதற்கு திரு. சமன் ரத்னப்பிரியவை பெயரிடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி உத்தேசிக்கின்றமை தொடர்பாக பல ஊடகங்களால் செய்தி வெளியிட்டுள்ளமை தொடர்பாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கரிசனம் கொண்டுள்ளது. ஆகஸ்ட் 17, 2015 நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.கவினால் சமர்ப்பிக்கப்பட்ட, அரசியலமைப்பின் 99 'அ' உறுப்புரைக்கமைய பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்படக்கூடிய நபர்களின் பெயர்ப்பட்டியலில் ('தேசியப் பட்டியல்') திரு. ரத்னப்பிரியவின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கப்படவில்லை என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்திற்கு கொண்டு வருகிறது.

அரசியலமைப்பின் படி, தேசியப் பட்டியல் மூலமாகத் தெரிவு செய்யப்படும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளில் ஏற்படும் ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கு, மாவட்ட நியமனப் பத்திரங்களில் ஒன்றிலோ அல்லது சம்பந்தப்பட்ட அரசியல் கட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட தேசியப் பட்டியலிலோ பெயர் உள்ளடக்கப்பட்ட ஒரு நபரினால் மாத்திரமே முடியுமென்பது, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிலைப்பாடாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் இந்த நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாகப் பேணி வந்துள்ளதுடன், அவ்வாறான நியமனங்கள் பலவற்றை நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்தியது உட்பட, இவ்வாறான நியமனங்கள் முன்பு மேற்கொள்ளப்பட்ட வேளைகளில் கரிசனங்களையும் எழுப்பியிருக்கின்றது.

ஐ.தே.க, ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி/ மக்கள் முன்னணி என்பன முன்னைய சந்தர்ப்பங்களில் இவ்வாறான நியமனங்களை பாராளுமன்றத்தில் மேற்கொண்டுள்ளன என்பதை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் கொள்கிறது. இவ்வாறான ஒரு வெற்றிடத்தை நிரப்புவதற்கு அரசியல் கட்சியின் "எந்தவொரு உறுப்பினரையும்" நியமிப்பதற்கு அவர்களை அனுமதிக்கின்ற, 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 64 (5) இன் பின்னால், இந்த அரசியல்

கட்சிகள் ஒளிந்து கொள்கின்றன. பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் குறித்த ஏற்பாடானது, அரசியலமைப்பின், குறிப்பாக உறுப்புரை 99 'அ' மற்றும் உறுப்புரை 101 (ஏ) இன் தெளிவானதும் மற்றும் சந்தேகத்திற்கிடமின்றியதுமான அவ்வேற்பாடுகளை மீறுகிறது, என மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் குறிப்பிடுகிறது. மேலும், சம்பந்தப்பட்ட தேர்தலில் நியமனம் செய்யப்படாத, "எந்தவொரு நபரையும்" நியமிக்கும் குறித்த நடைமுறை, மக்களின் இறையாண்மையின் ஒரு அங்கமான மக்களின் வாக்குரிமையை அப்பட்டமாக மீறுகிறது. அரசியலமைப்பில் உள்ளது போல் மக்களே குடியரசின் இறையாண்மை கொண்டவர்கள் எனின், பாராளுமன்றத்திற்கு கட்சி நியமிப்பதற்கு எண்ணுபவர்கள் யாரென்பதை ஒரு தேர்தலுக்கு முன்பே மக்கள் தெரிந்து கொள்ளுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு, அவர்கள் விரும்பிய எவரையும் நியமிப்பதற்கு அரசியல் கட்சிகளை அனுமதிப்பது, மக்களின் வாக்குரிமையின் பெறுமதியினை பங்கப்படுத்துகின்றதுடன் அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் அதிகாரத் தன்மையை தேவையற்ற மற்றும் எதேச்சாதிகாரமான வகையிலுமாக பெரிதாக்குகின்றது. அதனால், இவ்வாறான வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசியலமைப்பின் உறுப்புரை 99 'அ' இற்கமைய அரசியலமைப்பின் ஏற்பாடுகள் மற்றும் மக்களின் வாக்குரிமையை மதிப்பதற்கும் மற்றும் நியமிக்கப்படுவதற்கு தகுதியுடையதான ஒரு நபரை மாத்திரம் நியமிப்பதற்கு ஐ.தே.க. மற்றும் ஏனைய அனைத்து அரசியல் கட்சிகளையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் வலியுறுத்துகிறது. அரசியலமைப்பின் உறுப்புரை 99 'அ' மற்றும் உறுப்புரை 101 (ஏ) என்பவற்றுடன் ஒத்திசைவாகும் முகமாக, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் பிரிவு 64 (5) ஐ திருத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து அரசியல் கட்சிகளையும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கோருகின்றது.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka Tel: +94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org